**செய்தி வெளியீடு எண்: 67/2022** **நாள்: 30.07.2022**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் கல்வி சுற்றுலாவாக 58 ஆயிரத்து 528 மாணவ, மாணவிகள் பயணம் செய்துள்ளனர்**

**திருவான்மியூர், ஸ்வபோதினி சிறப்புப் பள்ளியைச் சேர்ந்த 26 மாணவர்கள் இன்று (30.07.2022) மெட்ரோ இரயிலில் பயணம் செய்தனர்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மெட்ரோ இரயில் மற்றும் மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள வசதிகள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலை வழித்தடத்திலும் மற்றும் விம்கோ நகர் பணிமனை மெட்ரோவில் இருந்து ஏ.ஜி-டி.எம்.எஸ் வழியாக விமான நிலையம் வரையிலான வழித்தடத்திலும் மெட்ரோ இரயிலில் மாதந்தோறும் கல்விப் பயணம் செய்து வருகிறார்கள்.

கல்விப் பயணங்கள் மாதந்தோறும் மேற்கொள்ளப்பட்டு மெட்ரோ இரயிலின் சிறப்பு அம்சங்களை பற்றி மாணவ, மாணவியருக்கு விளக்கப்பட்டு வருகிறது. இதில் சென்னையில் உள்ள அரசு மற்றும் மாநகராட்சிப் பள்ளிகள் மட்டுமின்றி திருவள்ளூர், செங்கல்பட்டு மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் மட்டுமின்று பல்வேறு தொண்டு நிறுவனத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் மெட்ரோ இரயில் கல்வி பயணத்தில் அழைத்து செல்லப்படுகின்றார்கள்.

திருவான்மியூர், ஸ்வபோதினி சிறப்பு பள்ளியை சேர்ந்த 26 மாணவ, மாணவிகள் கிண்டி முதல் விம்கோ நகர் மெட்ரோ வரை இன்று (30.06.2022) மெட்ரோ இரயிலில் கல்வி சுற்றுலாவாக பயணம் சென்றனர். இவர்களுடன் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ்பிரபு (தொடர் வண்டி மற்றும் இயக்கம்), மேலாளர் கே.எஸ்.அருண் (இயக்கம்), துணை மேலாளர் ஏ.அருள்ராதா (இயக்கம்) மற்றும் பலர் உடன் சென்றிருந்தனர்.

சென்னை மெட்ரோ இரயில்களில் இதுவரை அரசுப்பள்ளியை சேர்ந்த மாணவ, மாணவிகள் மற்றும் பல்வேறு தொண்டு நிறுவனத்தை சேர்ந்த மாற்றுத்திறனாளிகள் என 58 ஆயிரத்து 528 பேர் 300-க்கும் மேற்பட்ட பயணங்களில் கடந்த 2018 முதல் 2022-ஆம் ஆண்டு வரை கல்வி சுற்றுலாவாக இலவசமாக பயணித்துள்ளார்கள்.

சென்னை மெட்ரோ இரயிலில் இதுபோன்று பயணம் செய்வது புது அனுபவத்தையும், விரைவான, பாதுகாப்பான மற்றும் மகிழ்ச்சியான பயணத்தையும், இதில் உள்ள சலுகை கட்டணத்தையும் தெரிந்து கொண்டதாக மாணவ, மாணவியர்கள் தெரிவித்துள்ளார்கள்.

திருவான்மியூர், ஸ்வபோதினி சிறப்பு பள்ளி இயக்குநர் ஹேமமாலா இப்பயணம் பற்றி தெரிவித்ததாவது:

மாற்றுத்திறனாளிகள் மெட்ரோ இரயிலுக்கு செல்லும் வகையில் வசதியாக உள்ளது. தரைதளத்திலிருந்து மேல் தளம் செல்ல மின்தூக்கி வசதியுடன் மூன்று சக்கர நாற்காலியிலேயே மாற்றுத்திறனாளிகள் அமர்ந்து இரயிலுக்கு செல்லும் வசதி உள்லது. அதேபோல் சக்கர நாற்காலி ஒரு பெட்டியிலிருந்து மற்றொரு பெட்டிக்கு எவ்வித சிரமுமின்றி செல்ல முடிகிறது. இவர்களுக்கென்று ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் வசதியாக நிற்க முடிகிறது. இந்த வசதிகளுடன் கல்வி சுற்றுலா சென்று வருவது அவர்களுக்கு மட்டுமல்லாமல் அனைவருக்கும் மகிழ்ச்சியாக உள்ளது என்று தெரிவித்தார்.

பிற மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் மெட்ரோ இரயிலில் கல்விப் பயணம் செல்ல கீழ்கண்ட மின்னஞ்சலில் தொடர்புகொள்ளலாம்.

girirajan.l@cmrl.in
shrutishambavi.r@cmrl.in

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**